எண் 120.

# திரு ஆக்கூர்த் திருப்பதிகங்கள்.



சம்பந்தர்  அப்பர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 120.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருஆக்கூர்த் திருப்பதிகங்கள்

இது
திருக்கயிலாய பாரம்பரை தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946.

சிவமயம்

# பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்கச்செய்தலும் ஒன்றாம். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே திருஆக்கூர்த் திருப்பதிகங்கள் என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ தான்றோன்றியப்பனார் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

உ

சிவமயம்

## தலச்சிறப்பு

ஆக்கூர் என்னும் இத்தலத்து ஆலயம் தான்றோன்றிமாடம் எனத் திருமுறையில் குறிக்கப்பட்டுள்ளது. மாடக்கோயில்கள் பல வற்றுள் இவ்வாலயமும்ஒன்று. தான்றோன்றி மாடம் என்ற கோயிலின் பெயருக்கு ஏற்ப இறைவன் பெயரும் தான்றோன்றியப்பனுர் என்றே குறிக்கப்பெற்றுள்ளது. அம்மையார் திருநாமம் கட்கநேத்திரதேவி. தலப்பெயரும் ஆலயத்தின் பெயரும் சேர்ந்து ஆக்கூர்த் தான்றோன்றிமாடம் எனவும் வழங்கப்படும். வள்ளல் பெருமானுன சிறப்புலி நாயனுர் அவதார ஸ்தலமும் இதுவே. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந் தருளிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன.

இத்தலம் மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இருப்புப்பாதையில் புகைவண்டி நிலையமாக விளங்குகிறது.

## சிறப்புலிநாயனர்

புவனியிற் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மர்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனும்
அவனியிற் கீர்த்தித்தென் ஆக்கூர் அதிபன்
அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நம் சிறப்புலியே.

இவர் வேதியர் குலத்திலே அவதரித்தவர். சிவத்தொண்டு செய்தலே மனிதப்பிறவியின் பயன் என உணர்ந்தவர். மக்கள் யாவரே யாயினும் தம்மிடம் வந்து யாசித்தால் வேண்டியது எதுவாயினும் இல்லை என்னுது ஈந்து உவக்கும் தன்மையை யுடையவர். திருநீறும் கண்டிகையும் அஞ்செழுத்தும் பொருளாக்கொண்ட அடியார்களைக்காணின் அன்புமீதூர வரவேற்று இன்சொற்கூறி நல்லமு

தூட்டி, விரும்பியன எல்லாம் கொடுத்து நிதிமழை மாரிபோல் விளங்கியவர். அஞ்செழுத்தோதுதலும், அங்கிவேட்டலும்ஆகிய காரியங்களைச் செய்கின்ற இயல்பினர். "சீர் கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளாலே புகழப்பட்டவர்.

## பதிகக் குறிப்புகள்

**தலம்:-** ஆம்பல் நிறைந்த பொய்கையினையும், சேல்மீன்களும் செங்கழுநீர்ப் பூக்களும் குவளைமலரும் நிறைந்த குளங்களையும் கொண்டு விளங்குவது. குருகு என்னும் பறவைகள் குளத்திலேயுள்ள ஆரல் மீன்களை வாய்நிறைய வாரிக்கொண்டு கரையில் வந்து தங்கியிருக்கும், வெண்மாடங்கள் மிகவும் உயர்ந்து சந்திரனைத்தொடும்.

**கோயில்:-** தொல்கோயில், பூங்கோயில்.

வசிப்போர்:— கொடைத்தொழிலிற் சிறந்த வேளாளர்கள், வேதங்களையும் வேதாங்கங்களையும் கற்று வேள்விவேட்போர்கள், இறைவன் திருவடியைப் பூசித்தற்கு நாடோறும் பூவும் நீரும் சுமந்து செல்லும் அடியார்கள், வறுமையால் பற்றப்பட்டு யாசிக்கும் மக்களுக்கு இல்லையென்று கூறாது விரும்பியதைக் கொடுத்து மகிழும் தன்மையாளர்கள் ஆகியோர்கள் வசிக்கின்றார்கள்.

பொன்னிநீர் பாட்டின் நீடும்
பொற்பதி புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்(கு)
இல்லையென் றாதே ஈயும்
தன்மையார் என்று நன்மை
சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த
மறைத்திரு ஆக்கூர் அவ்வூர்.

—சேக்கிழார்.

சிவமயம்



# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

**பண் — சீகாமரம்**

திருச்சிற்றம்பலம்

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையும்
தொக்கிருந்த மார்பினான் றோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. க

நீரார வார்சடையா னீறுடையா னேறுடையான்
காரார்பூங் கொன்றையினான் காதலித்த தொல்கோயில்
கூராரல் வாய்நிறையக் கொண்டயலே கோட்டகத்தில்
தாராமல் காக்கூரிற் றான்றோன்றி மாடமே. உ

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் றொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாள ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௩

கொங்குசேர் தண்கொன்றை மாலையினான் கூற்றடரப்
பொங்கினான் பொங்கொளிசேர் வெண்ணீற்றான் பூங்கோயில் ௭
அங்கமா றோடு மருமறைக ளைவேள்வி
தங்கினா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௪

வீக்கினா னாடரவம் வீந்தழிந்தார் வெண்டலையென்
பாக்கினான் பலகலன்க ளாதரித்துப் பாகம்பெண்
ஆக்கினான் றொல்கோயி லாம்பழம்பூம் பொய்கையுடை-
தாக்கினா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௫

பண்ணொளிசேர் நான்மறையான் பாடலினோ டாடலினான்
கண்ணொளிசேர் நெற்றியினான் காதலித்த தொல்கோயில்
விண்ணொளிசேர் மாமதியந் தீண்டியக்கால் வெண்மாடம்
தண்ணொளிசே ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௬

வீங்கினார் மும்மதிளும் வில்வரையால் வெந்தவிய
வாங்கினார் வானவர்கள் வந்திறைஞ்சுந் தொல்கோயில்
பாங்கினார் நான்மறையோ டாறங்கம் பலகலைகள்
தாங்கினா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௭

கன்னெடிய குன்றெடுத்தான் றோளடரக் காலூன்றி
இன்னருளா லாட்கொண்ட வெம்பெருமான் றொல்கோயில்
பொன்னடிக்கே நாடோறும் பூவோடு நீர்சுமக்கும்
தன்னடியா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௮

நன்மையா னாரணனு நான்முகனுங் காண்பரிய
தொன்மையான் றோற்றங்கே டில்லாதான் றொல்கோயில்
இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. ௯

நாமருவு புன்மை நவிற்றச் சமண்டேரர்
பூமருவு கொன்றையினான் புக்கமருந் தொல்கோயில்
சேன்மருவு பைங்கயத்துச் செங்கழுநீர் பைங்குவளை
தாமருவு மாக்கூரிற் றான்றோன்றி மாடமே ௧௦

ஆட லமர்ந்தானை யாக்கூரிற் றான்றோன்றி
மாட மமர்ந்தானை மாடஞ்சேர் தண்காழி
நாடற் கரியசீர் ஞானசம் பந்தன்சொல்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

முடித்தா மரையணிந்த மூர்த்திபோலும்
மூவுலகுந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலுங்
கல்லலகு பாணி பயின்றார் போலுங்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர்
குற்றேவ லாமகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௧

ஓதிற் றொருநூலு மில்லை போலும்
உணரப் படாததொன் றில்லை போலும்
காதிற் குழையிலங்கப் பெய்தார் போலுங்
கவலைப் பிறப்பிடும்பை காப்பார் போலும்
வேதத்தோ டாறங்கஞ் சொன்னார் போலும்
விடஞ்சூழ்ந் திருண்ட மிடற்றார் போலும்
ஆதிக் களவாகி நின்றார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௨

மையார் மலர்க்கண்ணாள் பாகர் போலும்
மணிநீல கண்ட முடையார் போலும்
நெய்யார் திரிசூலங் கையார் போலும்
நீறேறு தோளெட் டுடையார் போலும்
வையார் மழுவாட் படையார் போலும்
வளர்ஞாயி றன்ன வொளியார் போலும்
ஐவா யரவமொன் றார்த்தார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௩

வடிவிளங்கு வெண்மழுவாள் வல்லார் போலும்
வஞ்சக் கருங்கடனஞ் சுண்டார் போலும்
பொடிவிளங்கு முந்நூல்சேர் மார்பர் போலும்
பூங்கங்கை தோய்ந்த சடையார் போலும்
கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்
கட்டங்க மேந்திய கையார் போலும்
அடிவிளங்கு செம்பொற் கழலார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௪

ஏகாச மாம்புலித்தோல் பாம்பு தாழ
விடுவெண் டலைகலனா வேந்தி நாளும்
மேகாசங் கட்டழித்த வெள்ளி மாலை
புனலார் சடைமுடிமேற் புனைந்தார் போலும்
மாகாச மாயவெண் ணீருந் தீயு
மதியு மதிபிறந்த விண்ணு மண்ணும்
ஆகாச மென்றிவையு மானார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௫

மாதூரும் வாணெடுங்கண் செவ்வாய் மென்றோண்
மலைமகளை மார்பத் தணைத்தார் போலும்
மூதூர் முதுதிரைக ளானார் போலும்
முதலு மிறுதியு மில்லார் போலும்
தீதூர நல்வினையாய் நின்றார் போலுந்
திசையெட்டுந் தாமேயாஞ் செல்வர் போலும்
ஆதிரை நாளா வமர்ந்தார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௬

மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்றோ லுடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலுங்
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானைந் தாட லுகப்பார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௭

கண்ணார்ந்த நெற்றி யுடையார் போலுங்
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தார் போலுங்
உண்ணா வருநஞ்ச முண்டார் போலும்
ஊழித்தீ யன்ன வொளியார் போலும்
எண்ணா யிரங்கோடி பேரார் போலும்
ஏறேறிச் செல்லு மிறைவர் போலும்
அண்ணாவு மாரூரு மேயார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௮

கடியார் தளிர்கலந்த கொன்றை மாலை
கதிர்போது தாதணிந்த கண்ணி போலும்
நெடியான் சதுர்முகனும் நேட நின்ற
நீலநற் கண்டத் திறையார் போலும்
படியே வழல்வண்ணஞ் செம்பொன் மேனி
மணிவண்ணந் தம்வண்ண மாவார் போலும்
அடியார் புகலிடம தானார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. ௯

திரையானுஞ் செந்தா மரைமே லானுந்
தேர்ந்தவர்க டாந்தேடிக் காணா நாணும்
புரையா னெனப்படுவார் தாமே போலும்
போரேறு தாமேறிச் செல்வார் போலும்
கரையா வரைவில்லே நாக நாணுக்
காலத்தீ யன்ன கனலார் போலும்
வரையார் மதிலெய்த வண்ணர் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்ப னாரே. கo

திருச்சிற்றம்பலம்.

14

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். C, 500.

ஆரூர்மூ லட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணும்
கூரார் குறுக்கைவீ ரட்டா னமும்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன் றுங் கானப் பேரும்
கயிலாய நாதனையே காணலாமே.

செவ்விய இதழி மத்தம்வெள் ளெருக்குச்
செருந்திகூ விளமணி முடியாய்
கெரவ்வையாய்க் கட்க நேத்திராம் பிகையாய்
கொற்றவா எற்கருள் புரிவாய்
அவ்விய மவித்த உளத்தொடு மகவான்.
அருச்சனை புரியுமா ரமுதே
திவ்விய ஆக்கூர்ச் சுயம்புநா தேசா
செல்வமே கருணைவா ரிதியே.